# DEPOSITION OF WITNESS
# IN THE COURT OF SUB COURT, USILAMPATTI.

| | |
|---|---|
| Miscellaneous case No: | : S.C. No. 323/2012 |
| Preliminary Register | : |
| Sessions | : |
| Deposition of witness of | : P.W. 4 |
| Name | : ராஜாக்கிளி. |
| Father's Name | : |
| Village | : |
| Taluk | : |
| Caste | : |
| Calling | : |
| Religion | : |
| Age | : |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the day of 09.02.2024.

- - - - - - -

1 வது எதிரி ஆஜர். 2 வது எதிரி வழக்கிலிருந்து விடுவிக்கப்பட்டுள்ளார்.

முதல் விசாரணை:

நான் உசிலம்பட்டி, ராமத்தேவர் தெருவில் குடியிருந்துவருகிறேன். ஆஜர் எதிரியைத் தெரியும். அவர் என் எனது அண்ணன் மருமகன் ஆவார். நான் உசிலம்பட்டியில் பஸ் ஸ்டாண்டிற்குப் பக்கம் வாட்ச் கடை வைத்துள்ளேன். கடந்த 20.07.2011 ஆம் தேதி, மாலை சுமார் 5 மணியளவில் எனது கடைக்குப் பக்கத்தில் டீக் கடை வைத்துள்ள பழனி என்பவர் உன் அண்ணன் கே.கே.போஸ் அவர்களை கடையில் வைத்து எதிரி வெட்டியதாகச் சொன்னார். அப்போது நான் ஓடிவந்து பார்த்தபோது என் அண்ணன் போஸ் கழுத்தில் வெட்டுப்பட்டு கீழே கிடந்தார். அதன்பின்பு, ஒரு ஆட்டோவை கூப்பிட்டு என் அண்ணனை சிகிச்சைக்காக உசிலம்பட்டி அரசு மருத்துவமனையில் சேர்த்தேன். எனது

அண்ணனிடம் மருத்துவமனையில் யார் உன்னை வெட்டினார்கள் என்று கேட்டபோது, என் மருமகன் ஆனந்தராஜ் வெட்டிவிட்டதாகச் சொன்னார். அதன்பின்பு, மேல்சிகிச்சைக்காக மதுரை, மீனாட்சி மருத்துவமனையில் என் அண்ணனைச் சேர்த்தார்கள். போலிசார் என்னை விசாரித்தார்கள்.

<u>குறுக்கு விசாரணை</u> - இல்லை.

ஒப்பம் / P.S. ரஸ்கின் ராஜ், 09.02.2024.
சார்பு நீதிபதி, உசிலம்பட்டி.

/ உண்மை நகல் /

சார்பு நீதிபதி, உசிலம்பட்டி.